
# தாத்தாவுக்குத் தேங்காய்ப்பால்




கதை, ஓவியம்
சிபில் வெத்தசிங்ஹ

மார்க வெளியீடு
இன ஒற்றுமைக்கான நிகழ்ச்சித்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தாவுக்குத் தேங்காய்ப்பால்



## கதை, ஓவியம்

## சிபில் வெத்தசிங்ஹ

பதிப்பாசிரியர்
பியவதி ஜயசூரிய

மொழிபெயர்ப்பு
சரோஜினி தேவி அருணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு - 1995

சகல உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நூலிலிருந்து ஏதேனும் பகுதியைப் பிரித்தெடுப்பதானால்
மார்க நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**மார்க வெளியீடு**
941/1, ஜயந்தி மாவத்த,
கோட்டே வீதி,
அத்துல்கோட்டே.
2888790/2888791

நிதி உதவி :- உலக வங்கி (World Bank)

**அச்சிட்டோர்**
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
48B, புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 13
தொலைபேசி :- 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று டீச்சர் அம்மா சற்றுத் தாமதமாகியே வீட்டுக்கு வந்தார். வழியில் எதிர்ப்பட்ட பிள்ளைகள் கூட்டம் விளையாடுவதற்காக பள்ளத்திலிருந்த வயல்வெளியை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

“நாங்கள் தாத்தாவுக்குக் குடிக்க அசிட் கொடுத்தோமே” என்று சொல்லியவாறு அவர்கள் ஓடினார்கள்.

“என்ன! என்ன தாத்தாவுக்குக் குடிக்க அசிட் கொடுத்தீர்களா? என்ன இது அநியாயம்” என்று டீச்சர் அம்மா கேட்டு வாய் மூட முன்னரே பிள்ளைகள் ஓடிவிட்டார்கள்.

டீச்சர் அம்மா கலவரமடைந்தவராக இரண்டே எட்டில் வீட்டுக்கு ஓடினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா! அப்பா!" என்று கூக்குரலிட்டவாறு டீச்சர் அம்மா வீட்டுக்குள் விரைந்தாள். தாத்தா கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார்.

"என்ன மகளே என்ன நடந்தது" என்று கேட்டபடி பாட்டி ஓடி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயோ அம்மா இந்தப் பிள்ளைகள் எல்லோருமாகச் சேர்ந்து எங்கள் அப்பாவுக்கு அஸிட்டை அல்லவா குடிக்கக் கொடுத்துவிட்டார்கள்; இப்போ என்ன செய்வது” என்று டீச்சர் அம்மா அழுது புலம்பியபடி சொன்னாள்.

“அடடா ஆபத்தாச்சே உடனடியாகத் தேங்காய்ப் பால் கொஞ்சம் குடிக்கக் கொடுத்தால் நல்லது” என்று சொல்லிக்கொண்டே பாட்டி அடுக்களைப் பக்கம் போனாள்.

தேங்காய் துருவி பாலைப் பிழிந்து ஒரு கிண்ணத்தில் வார்த்து எடுத்துக் கொண்டு டீச்சர் அம்மா தாத்தாவின் கட்டிலை நோக்கி ஓடினாள்.

“அப்பா! அப்பா! எழுந்திருங்கள் அப்பா”

தாத்தா எழுந்து கட்டிலில் உட்கார்ந்தவாறு

“என்ன மகளே இங்கே என்ன கலவரம்?” என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் பாட்டியம்மா இந்தப் பயங்கரச் செய்தியை அயல் வீட்டுக்காரர்களுக்கும் சொல்லிவிட்டாள். அவர்களும் ஏதோ என்னவோ என்று பயந்து ஓடிவந்தார்கள். வீட்டில் ஜனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.

அவ்வேளை நாதன் தாத்தா "கொஞ்சம் வழிவிடுங்கள். இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நான் போய் வாகனமொன்றைக் கொண்டு வருகிறேன். அண்ணாவை வைத்தியசாலைக்கு அழைத்துப் போவோம்" என்று பதற்றத்துடன் கத்தினார்.

"என்ன வைத்தியசாலைக்கா? என்னை எதற்காக வைத்தியசாலைக்கு அழைத்துப் போக வேண்டும்? எனக்கு அப்படி என்னதான் வருத்தம் வந்துவிட்டது?" என்று தாத்தா கண்களை அகலத் திறந்தபடி வியப்போடு கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதற்கு முன்னால் இந்தத் தேங்காய்ப் பாலைக் குடிக்கக் கொடுப்போமே” என்று டீச்சர் அம்மா அழுதழுது சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமன் ரொம்பச் சிரமப்பட்டு தாத்தாவைக் கட்டிலில் படுக்க வைத்தார்.

“ராமன் தம்பி என்ன இது? என்னை ஒரு நோயாளியாக்கி விட்டீர்களே”

இதற்கிடையில் லைசா பாட்டி ஒரு பீரிசில் இரண்டு பாண் துண்டுகளை வைத்து எடுத்து வந்தாள்.

“பாலோடு இந்தப் பாணையும் சேர்த்துச் சாப்பிடக் கொடுங்கள். விஷம் குடித்திருந்தால் பாலும், பாணும் அந்த விஷத்தை உறிஞ்சி எடுத்துவிடும்.”

“தயவு செய்து இந்தப் பாணைச் சாப்பிடுங்கள் மாமா” என்று கரீம் கெஞ்சினார்.

ஒருபுறம் இவ்வளவும் நடந்துகொண்டிருக்கும் வேளையிலேயே பாட்டியம்மா ஐம்பது சத நாணயக் குற்றியொன்றை எடுத்து மஞ்சள் நீரில் அதை அலம்பி சுத்தமான பழந்துணியில் சுற்றி தாத்தாவுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்று நேர்ந்து வைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பார்வதி "எல்லோரும் வாருங்கள் தாத்தாவைப் பிடித்துக் கொண்டு தேங்காய்ப்பாலை அவருடைய வாய்க்குள் ஊற்றுவோம்" என்றாள்.

இத்தனை கலவரங்களுக்கு மத்தியில் "பிள்ளைகளே உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது" என்று கேட்க மட்டும் தான் தாத்தாவால் முடிந்தது.

"குழந்தைகள் மாமாவுக்கு அசிட் குடிக்கக் கொடுத்துவிட்டார்களாமே?" மம்மா பெலா கட்டிலருகே முழங்காலில் நின்றபடி கேட்டாள்.

"என்ன அசிடா? பிள்ளைகள் எனக்கு அசிட் பருக்கினார்களா? அதைக் குடித்திருந்தால் இந்நேரம் என்னுடைய கதையே முடிந்திருக்குமே" என்று சிரித்தபடி சொன்னார் தாத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நேரம் பார்த்து பிள்ளைகள் வீட்டுக்குள் ஓடி வந்தார்கள்.

"குழந்தைகளே! இந்த அதிசயத்தைப் பார்த்தீர்களா நீங்கள் எனக்குக் குடிப்பதற்கு அசிட் கொடுத்து விட்டதாக எண்ணிக்கொண்டு இவர்கள் என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல தயாராகிறார்களே".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டுவிட்டுக் குழந்தைகள் நிலத்தில் புரண்டு புரண்டு சிரித்தார்கள். பெரியவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார்கள். தாத்தாவும் பிள்ளைகளோடு சேர்ந்து சிரித்தார்.

"நாங்கள் என்ன செய்தோம் தெரியுமா? டிரோன் வீட்டு தோட்டத்து எலுமிச்ச மரத்திலிருந்து எலுமிச்சம் பழங்களைப் பறித்துவந்து அவற்றைப் பிழிந்து தண்ணீரும் சீனியும் கலந்து பழ ரசம் தயாரித்தோம்" என்று புஞ்சா சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிறகு தாத்தாவுக்கும் அதில் கொஞ்சம் குடிக்கக் கொடுத்தோம். எலுமிச்சம் சாற்றில் நிறைய அசிட் இருப்பதாக தாத்தா சொன்னார்” என்றாள் மீனா.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த புஞ்சா “எலுமிச்சம் பழத்தில் அசிட் இருக்கும் விஷயம் இதற்கு முன்னால் எங்களுக்குத் தெரியாது. அதனால் தான் தாத்தாவுக்கு அசிட் குடிக்கக் கொடுத்ததாகச் சொல்லிவிட்டோம்” என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா அசிட் குடித்ததால்
வீட்டில் எங்கும் கலவரம்
மருத்துவ மனைக்குப் போகத்தான்
அமர்க்களமோ அமர்க்களம்

தெய்வ அருளைக் கேட்டுத் தான்
பாட்டியின் நேர்த்தி ஒரு புறம்
தேங்காய்ப் பாலுடன் பாண் கலந்தே
உண்ணக் கொடுப்போர் மறுபுறம்

என்ன இது விந்தையடா
நோயுமில்லை நொடியுமில்லை
நாங்கள் வந்து சேர்ந்ததுமே
தாத்தாவுக்கு விடுதலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org